விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆனி 11 ஷவ்வர 16 இதழ் 134

யாழ்ப்பாணம் புதன்கிழமை 25-6-1986

மன்னர் கடல் சம்பவம்

## படகில் சென்ற 32 அகதிகள் பலியாகியிருப்பது ஊர்ஜிதம்!

### நீந்தி வந்த இருவர் தகவல்!!

யாழ்ப்பாணம், புதன் கடந்தவியாழக்கிழமைமன்னர் கடலில் 'அன்னைமேரி' என்ற படகில் சென்ற 34 அகதிகளில் 32 பேர் கொல்லப்பட்டிருப்பது தற்போது ஊர்ஜிதமாகியுள்ளது.

இப்படகு மறுநாள் வெள்ளிக்கிழமை அதிகாலை 3 மணிக்கும், 4 மணிக்குமிடையே தலைமன்னர், பேசாலை கடலில் கடற்படைப் படகொன்றினால் எதிர்கொள்ளப்பட்டுள்ளது.

தொடர்ந்து அக்கடற்படைப்படகு மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தின் போது அன்னை மேரி படகில் சென்றவர்களில் சிலர் அப்படகிலேயே கொல்லப்பட்டனர். மேலும் சிலர் அப்படகிலிருந்தும் நீரில் குதித்து நீந்திச்செல்ல முயற்சித்தனர். ஆயினும் ஆழ்கடல் அலைகள் காரணமாக நீந்தியவர்களில் பலர் நீரில்மூழ்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

'அன்னைமேரி'ப் படகுமீது நடத்தப்பட்ட தாக்குதலை

(6ம் பக்கம் பார்க்க)

சர்வகட்சி மகாநாடு:

## 'ஆக்கபூர்வ நடவடிக்கை வேண்டும்'

# ராஜீவ் செய்தியுடன் டிக்ஸிற் ஜே. ஆர். 40 நிமிடம் சந்திப்பு!

LIBRARY

(கொழும்பு)

இலங்கை அரசு இன்று கூட்டவுள்ள சர்வகட்சி மகாநாடு ஆக்கபூர்வமானதாக அமையவேண்டுமெனவும், இம் மகாநாட்டினைத் தொடர்ந்து எடுக்கப்படும் அமைதி முயற்சிகளின் போது வன்முறைகள் எதுவும் இடம்பெற மாட்டாதென தாம் நம்புவதாகவும் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி, இந்திய உயர்ஸ்தானிகர் மூலமாக ஜனாதிபதி ஜயவர்த்தனவுக்கு விசேட செய்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் இந்த விஷேட செய்தியுடன் இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜே. என். டிக்ஸிற் ஜனாதிபதி ஜயவர்த்தனவை நேற்று மாலை சந்தித்தார். இச்சந்திப்பு சுமார் 40 நிமிட நேரம் இடம்பெற்றது.

திரு. டிக்ஸிற், அண்மையில் இந்திய அரசிடம் இலங்கை சமர்ப்பித்த ஆலோசனைகள், அவற்றுக்கான விளக்கங்கள் குறித்தும் கலந்துரையாடினார். கூடவே இலங்கைத் தமிழ்க்குழுக்களிடம் இப்புதிய யோசனைகளைக் கையளிப்பது

(6ம் பக்கம் பார்க்க)

## 8 கட்சிகள் கூடுகின்றன!

கொழும்பு புதன்கிழமை இலங்கை இனப்பிரச்னைக் குறித்து ஆலோசனை நடத்தும் வகையில் அரசாங்கத்தால் கூட்டப்படும் சர்வகட்சி மாநாடு இன்று கொழும்பில் நடைபெறும்.

குடியரசு சதுக்கத்தில் அமைந்துள்ள அமைச்சரவை அலுவலகத்தில் நடைபெறும் இம்மாநாட்டில் முக்கியஎதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி தவிர்ந்த ஏனைய எட்டுக்கட்சிகள் கலந்துகொள்கின்றன.

ஐக்கிய தேசியக்கட்சி, இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ், நவசமசமாஜக்கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி, இலங்கை சமசமாஜக்கட்சி, இலங்கை மக்கள் கட்சி, ஜன

(6ம் பக்கம் பார்க்க)

## திருமலை நகரசபைபகுதியில் 5 ஆயிரம்பேர்கைது

திருகோணமலை புதன் திருமலைநகரசபைஎல்லைக்குட்பட்டபகுதியை நேற்று சுற்றிவளைத்த முப்படையினர்சுமார் 5ஆயிரம் தமிழர்களை கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர். இதனைத் தொடர்ந்து திருமலைநகரத்தில்மயான அமைதிகுடிகொண்டுள்ளது.

(6ம் பக்கம் பார்க்க)

மட்டு - கொழும்பு ரயிலில்

## பத்து தமிழ் பிரயாணிகள் கடத்தல்; 25 பேர் கைது

மட்டக்களப்பு செவ்வாய் மட்டக்களப்பிலிருந்துகொழும்புநோக்கிச்சென்ற ரயிலிலிருந்த தமிழ்ப் பிரயாணிகளில் பலர் பயங்கர ஆயுதங்கள் கொண்ட குண்டர் கோஷ்டியினால் தாக்கப்பட்டதுடன் 10 பேர் வரை கடத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் 25 ற்கு மேற்பட்ட தமிழர்கள் ஆயுதப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு அரச அதிபரிடம் புகார்செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிற்கும்மின்னேரியாவுக்குமிடையில் இப்பயங்கரச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை 22-ம் திகதி வேலைவாய்ப்பு நிமித்தமும் மற்றும் கொழும்பில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் உட்பட மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழர்கள் ரயிலில் கொழும்பு நோக்கிச்சென்றனர். மின்னேரியா ரயில் நிலையத்துக்கு அண்மையில் குண்டர் கோஷ்டி ஒன்று இந்த ரயிலில் ஏறி தாங்கள் வைத்திருந்த வாள், இரும்புக்

(6ம் பக்கம் பார்க்க)

முஸ்லிம் வட்டாரத்தில்

## கோஷ்டி மோதல் மூவர் பலி, 11 பேர் காயம்

ஐ. சண்முகலிங்கம் புதன் யாழ் முஸ்லிம் வட்டாரத்தில் இரு கோஷ்டியினருக்கிடையில் ஏற்பட்டமோதலின் போது கிறனெட் வீச்சு, வாள் வெட்டு என்பனவற்றில் 7 வயதுச் சிறுவன் உட்பட மூவர் மரணமடைந்துள்ளனர். பதினொரு பேர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின்நிலை கவலைக்கிடமாகவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுக்காலை 9மணியளவில் நடைபெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து மாலை 3 மணியளவில் ஒஸ்மானியாக் கல்லூரிமுன்பாக இடம்பெற்றகோஷ்டி மோதலின் போது வாள் வெட்டுகளும் அதனைத்தொடர்ந்து கிற

(6ம் பக்கம் பார்க்க)

## ராமேஸ்வரத்தில் மீண்டும் இலங்கை தமிழ் அகதிகள்

சென்னை செவ்.

நேற்று முன்தினம் 45 குடும்பங்களைச் சார்ந்த 149 இலங்கைத் தமிழ் அகதிகள்ராமேஸ்வரம் வந்துசேர்ந்ததாக அகில இந்திய வானொலி அறிவித்தது.

இவர்களுள் பெரும்பாலானோர் பேசாலை, மன்னார் பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

தற்சமயம் மண்டபம்முகாமில் 1089 குடும்பங்களைச் சேர்ந்த 3545 இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஷ)

## 'கஞ்சா' விற்றோருக்கு கடும் எச்சரிக்கை

பண்டத்தரிப்பு செவ்வாய் பனிப்புலம் பகுதியில் இரு வீடுகளிலும், கடை ஒன்றிலும் விற்பனை செய்யப்பட்டு வந்ததாக கூறப்படும் போதை வஸ்து பொருள்களில் ஒன்றான கஞ்சாவை இளைஞர் குழுவொன்று கைப்பற்றியது. மேற்படி வீடுகளிலும் கடையிலும் கஞ்சா விற்கப்படுவதாக இயக்கத்தைசேர்ந்த இளைஞர்களுக்கு கிடைத்த [illegible] தொடர்ந்து அங்கு முற்றுகையிட்ட இந்த இளைஞர் குழுவினர் அங்கு மறைத்துவைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான கஞ்சாவை கைப்பற்றினர்கள்.

இனிமேல் இவ்வாறான சமூக விரோதமான செயல்களில் ஈடுபட மாட்டோம் என்று வீட்டு உரிமையாளர்களும், கடைக்காரரும் உறுதியளித்ததின் பேரில் அவர்களை இளைஞர்கள் கடுமையாக எச்சரித்[illegible] கப்பட்டது.

## புனித இயக்கங்களுக்கு மிகவும் பணிவான வேண்டுகோள்

எனது ஸ்தாபனத்திற்கு பளையைச் சேர்ந்த தருமலிங்கம் என்பவரின் 26ஸ்ரீ 6305 இலக்க நம்பர் லொறியில் கொழும்பிலிருந்து யாழ். நகருக்கு ஏற்றி வந்த பொருட்களான கைக்கோ, ஈஸ்ட், சவர்க்காரம், தீப்பெட்டி, மீன்ரின் ஆகிய பொருட்களுடன் 14-6-86 ல் விஸ்வமடு றெட்பானாவுக்கு அருகாமையில் இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டது. இப் பொருட்கள் அத்தியாவசியப் பொருட்களாக இருப்பதினால் பொதுமக்களின் நலன்கருதி இதில் புனித இயக்கங்கள் தலையிட்டு மீட்டுத்தந்து உதவுமாறு மிகப்பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

எஸ். வி. முருகேசு.

[C-3078]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## விற்பனைக்கு

பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. கிலோ ரூபா 250/. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C 3004)

Auto Zooming Auto Forgus Title ஆகிய தன்னியக்க வசதிகள் உடைய மிக அண்மையில் அறிமுகமான J V C. Video Camera (Model No. GX. N. 70E) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ''ரெலிகோணர், சாவகச்சேரி'', C 3037)

## வகுப்புகள்

இன்று (புதன்) மாலை 2-30 ஆரம்பம். பிரபல ஆசிரியர் திரு மகாதேவாவின் Organic Chemistry For A/L 87 Batch நாகலிங்கம் இன்ஸ்ரிடியூட், நாவலடி லேன், திருநெல்வேலி மேற்கு. (C 3064)

108 Brown Road, Jaffna, A/L 87 சேதன இரசாயனம் ஆசிரியர் சக்திஸ். ஆரம்பம் 30-06 86 திங்கள் 6-15 A M (திங்கள், புதன் 6-15 A M) A/L 88 புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன. (திங்கள், புதன், வெள்ளி 4-45 P M) [C 3067)

புதிய தொழில் நுட்ப வகுப்புக்கள் 28-06-86ல் ஆரம்பமாகின்றன. ரேடியோ அன் ரீ.வி, எலக்றிக் வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், பிளம்பிங், வாகனங்களுக்கான வயறிங், தட்டெழுத்து, சுருக்கெழுத்து - அனுபவமுள்ள பொறியியலாளர்களால் கற்பிக்கப்படுகின்றன. வெளிநாடுகளுக்குச் செல்பவர்களுக்குத் துரிதமாக வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 3060)

## கல்வி

Special English விசேட ஆங்கில வகுப்பு ஆசிரியர் த. ந.பஞ்சாட்சரம் இடம்: Ganas Academy, Nallur விரிவான, விளக்கமான, துரித போதனை, மொழியின் சகல அம்சங்களும் உள்ளடக்கிய கற்கை நெறி, பாடக் குறிப்புகள் வழங்கப்படும். பல்கலைக்கழக, தொழில் நுட்ப, உயர் கல்வி மாணவர்களுக்குரியது. ஆறுமாதப் போதனை வாரத்தில் 3 நாட்கள் ஆரம்பம்: 24 6 1986 பி.ப 3.30 மணி. (C- 3069)

## வாடகைக்கு

கச்சேரி நல்லூர் ஆகிய இடங்களில் கந்தோர் நடத்துவதற்கு உகந்த கட்டிடம், சிறிய வீடு அல்லது அறை வாடகைக்கு உடன் தேவை. தொலைபேசி வசதி இருத்தல் விரும்பத்தக்கது. தொடர்பு: செயலாளர், 32, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்) [C 3058)

## விற்பனைக்கு

9 Sri 807 பஜாட்ஜ் (Bejaj) ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 78 கண்டி வீதி, சுண்டுக்குளி (கச்சேரிக்கும் றெயில் கடவைக்கு மிடையில்). (C 3076)

## சேவை

தட்டச்சு இயந்திரங்கள் [Typewriters] சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். விலைக்கும் தமிழ், ஆங்கிலம், தட்டச்சு இயந்திரங்கள் வாங்கப்படும். Fudo Enterprises, 39/17 மின்சார நிலைய வீதி, (3ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். [C 3068)

தரமான ''போட்டோஸ்ரற்'' பிரதிகள் தெளிவான ''ரோனியோ'' பிரதிகள், தமிழ் - ஆங்கில ''ரைப்பிங்'' வேலைகளுக்கு யாழ். நகரில் நாடவேண்டிய இடம்; கிளீன் கட், 239, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். [C-2993]

## தேவை

கட்டிட மேற்பார்வையாளர் (பயிலுநர்) வெற்றிடத்துக்கு 29-6-86இன் முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ்நகரிலிருந்து 3 மைல்களுக்குள் வசிப்பவராயும் கட்டிடத்துறை சார்ந்த பாடநெறியொன்றைப் படித்தவராய் அல்லது படிப்பவராயும் இருத்தல் வேண்டும். விளம்பரதாரர் A 872, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (A 872)

பொறியியல் வேலைத்தளமொன்றில் உதவியாளர்களாக வேலை செய்யவும் தொழில் பழகவும் விரும்பும் 30 வயதுக்குட்பட்ட ஆண்கள் 30-6-86இன் முன் விண்ணப்பிக்கவும். யாழ் நகரிலிருந்து 4 மைல்களுக்குள் வசிப்பவர்களாக இருத்தல் அவசியம். விளம்பர இல. A 871, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (A 871)

கேற், கிறில், தளபாட வேலை தெரிந்த வெல்டர் தேவை. தொடர்பு அபிராமி ரிம்பர் வேர்க்ஸ், 75 மானிப்பாய் வீதி, [ஈழநாடு அருகாமை) யாழ்ப்பாணம். (C 3074)

வலி கிழக்கு வடபகுதி பல் நோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

### லொறிக்கூடாரம் அமைத்தல்

வலி கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 26 ஸ்ரீ 5725 லொறிக்கு புதிய பொடி அமைத்தலுக்கான கேள்வி விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்ட கராச் உரிமையாளர்களிடமிருந்து கோரப்படுகின்றன, மாதிரி விண்ணப்பப்படிவங்கள் சங்கத்திலிருந்து பெற்று 9-7-86க்கு முன்னதாக பொதுமுகாமையாளர், வலி கிழக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம், இராஜ வீதி, அச்சுவேலி என்ற விலாசத்திற்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை சங்கத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.

20-6-86. (A 868)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வன் சஞ்சீபன்**

அச்சுவேலியைச் சேர்ந்த சஞ்சீபன் ஸ்ரூடியோ உரிமையாளர் நாதன்- புஸ்பராணி தம்பதிகளின் அன்புச் செல்வன் சஞ்சீபன் இன்று (25-6-86) தனது முதலாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமன்மார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், பெரியம்மா, பெரிய மாமா (சவூதி), ரவி அத்தான் (ஒஸ்ரியா], வெள்ளை அத்தான் (ஜெர்மனி), ரூபன் அத்தான் [கனடா] மற்றும் அண்ணமார், அக்காமார், சித்தப்பா, சித்திமார், அச்சுவேலியைச் சேர்ந்த ஆட்மாஸ்டர் இராசையா குடும்பத்தினர், மல்லாகத்தைச் சேர்ந்த தேவராஜா குடும்பத்தினர், ஏழாலையை சேர்ந்த அம்பி அன்ரி குடும்பத்தினர், மற்றும் உற்றார், உறவினர் அனைவரும், செல்வன் சஞ்சீபனை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள்.

C 3061

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

கரவெட்டி வடக்கு சபாரத்தினம் பெண் தங்கம்மாவின் மரணசாதன விடயமாக:
சபாரத்தினம் மகள் பத்மினி, அரசவீதி, வதிரி, கரவெட்டி.

-மனுதார்

மரணசாதன நியாயாதிக்க வழக்கிலக்கம்: T. 1242

எதிராக

1. சின்னத்தம்பி சபாரத்தினம்
2. சபாரத்தினம் நந்தகுமார்
3. சபாரத்தினம் சரவணபவான்
4. சபாரத்தினம் கமலநாதன்
5. சபாரத்தினம் மகள் யோகராணி

எல்லோரும் அரசவீதி, வதிரி, கரவெட்டி.

-எதிர்மனுதார்கள்

மேலே இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ஆம் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு ஆனி மாதம் 12ஆம் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி,

**சண்முகம் நடராசா.**
பதிவாளர்.

வரைவு:
வ. மகாலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி
[C-3028]

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி பானு ரேகா**

வேலணை மேற்கைச் சேர்ந்த பாலசூரியன் லலிதா தம்பதிகளின் செல்வப் புதல்வி பானு ரேகா தனது முதலாவது பிறந்தநாளை இன்று (25-6-86] தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, ஆசையப்பா கனடா சித்தப்பா, லண்டன் பெரியம்மா, மாமாமார், பெரியம்மாமார், அத்தைமார், அன்ரி, அண்ணா, அக்காமார், தம்பி, மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

[C 3065

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

பொலிகண்டியிலிருந்து காலஞ்சென்ற நடராசா சுந்தரமூர்த்தியின் ஆதன விடயமாக

சொத்துறுதிசார் நியாயாதிக்க } வழ இல: 1241

வேலுப்பிள்ளை நடராசா, பொலிகண்டி.

-விண்ணப்பதாரருக்கு

1. நடராசா வாகீஸமூர்த்தி
2. நடராசா சம்பந்தமூர்த்தி
3. நடராசா மகள் செம்மனச்செல்வி

எல்லோரும் பொலிகண்டி.

-பிரதிவாதிகளுக்கும் இடையில்

மேலே இலக்கம் கொண்ட சொத்துறுதிசார் நியாயாதிக்க வழக்கு மேற்குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி ஆதனத்தில் அக்கறையுள்ளார் எவரும் 1986ம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ஆம் திகதி முற்பகல் 9-45 மணிக்கு இந்நீதிமன்றின் முன் தோன்றி அவ்வண்ணம் பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை முற்றான கட்டளையாகப் பதியப்படுவதற்கு ஆட்சேபனையிருப்பின் காரணம் காட்டுமாறு வேண்டப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு ஆனிமாதம் 9ஆம் திகதி.

நீதிமன்றின் கட்டளைப்படி,

**சண்முகம் நடராசா,**
பதிவாளர்.

வரைவு:
க. வ. சுப்பிரமணியம்,
சட்டத்தரணி, (C 3050)

மின்விசிறி, மின்அடுப்பு, மோட்டர் ரான்ஸ்போமர், கிறைண்டர், றிப்சுவிச், ஸ்ராட்டர்
எதுவானாலும்
திருத்த / றீவைண்டிங்
செய்ய
ஒமேகா மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
சகல வேலைகட்கும் 6 மாதம் உத்தரவாதம்.
இக்கால எல்லைக்குள் பிழை வந்தால் பணம் வாங்காமலே சீர் செய்து கொடுக்கப்படும்.
பழுதடைந்த மின் உபகரணங்கள் விலைக்கு வாங்கப்படும்.
[A 752]

பிரயாண ஒழுங்குகள்
டென்மார்க்
(கொழும்பிலிருந்து நேரடிப் பிரயாணம்)
(30-ம் திகதி எமது முகவர் கூட்டிச் செல்வார்.)
எமது காரியாலயத்தில் பதிவு செய்தவர்கள் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
லிபியா குவைத்
சவூதி அரேபியா
ஆகிய நாடுகளுக்கு வேலை வாய்ப்பு.
அத்துடன்
பாஸ்போட், BOND, ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாகச் செய்து கொடுக்கப்படும்.
யூனிவேர்சல் ஏஜென்சி,
125, (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(அபர்வேதக் கல்லூரிக்கு அருகாமையில் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக.)
(C 3056)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நான் பிறந்ததற்கு என் தந்தை காரணம் என்றால், நான் மனிதனாக வாழ்வதற்கு எனது ஆசிரியர்தான் காரணம்.

—அலெக்சாண்டர்

## நமது நோக்கு

# இன்று ஆரம்பமாகும் அரசியல் கட்சிகளின் மகா நாடு

இலங்கை ஜனாதிபதி திரு ஜே ஆர். ஜெயவர்த்தன விடுத்துள்ள அழைப்பின் பேரில் இலங்கைத்தமிழர் பிரச்னை தொடர்பான அரசியல் கட்சிகளின் மகாநாடு ஒன்று இன்று ஆரம்பமாகின்றது.

1983ம் ஆண்டு இனக்கலவரங்களையடுத்து இந்திய மத்தியஸ்த முயற்சிகளின் பேரில் ஆரம்பமான வட்டமேசை அல்லது சர்வகட்சி மகாநாடு போன்றில்லாமல், இலங்கை அரசின் தன் முனைப்பான ஏற்பாட்டில் இந்த மகாநாடு நடக்கவிருக்கின்றது. முன்னைய மகாநாடு ஆரம்பமான காலத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா குடியுரிமைகள் பறிக்கப்பட்டவராக இருந்தார். அப்போதைய மகாநாட்டில் அக்கட்சி கலந்து கொள்ளாமைக்கு இந்தப் பிரச்னையும் ஒரு காரணமாக அமைந்தது.

ஆனால் இன்றைய மகாநாட்டின் சூழ்நிலைவேறுவிதமானது.

அமைதி முயற்சிகள் ஒருபுறம் பகிரங்கமாக நடத்தப்பட்டுதந்த அதேவேளை போர் ஆயத்தங்களும், போர் நிறுத்த மீறல்களும் மறுபுறம் கனகச்சிதமாக நடத்தப்பட்டுவந்தன. இதனால் அப்பாவி மக்களே பெரும் எண்ணிக்கையில் பலியானார்கள்.

அமைதி முயற்சிகளில் நேர்மையாகவும், இதயசுத்தியுடனும் இவர்கள் ஈடுபட்டிருந்திருந்தால், தமிழர் பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகள் இன்று சீரழிந்து போயிருக்கமாட்டா. இளம் உயிர்கள் துடிக்கத் துடிக்கப்பலியாகி இருக்கமாட்டா, உயிருக்குப் பயந்தமக்கள் ஆயிரக்கணக்கில் அயல்நாடுகளுக்கு ஓடியிருக்கமாட்டார்கள்.

மக்கள் தமது சொந்த இடங்களில் அமைதியாக வாழமுடியாத நிலைமை. கடலில் பீரங்கிப்படகுகளின் அட்டகாசம், வானில் ஹெலிகொப்டர்கள், குண்டு வீசும் விமானங்கள், ஆயுதப்படைமுகாம்களிலிருந்து ஷெல் வீச்சுக்கள், நிலைமை இத்தோடு முடியவில்லை. சிங்களப் பகுதிகளில் சிங்கள மக்களே நிம்மதியை இழந்துள்ளனர். அரசியல் தலைவர்களே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்கள் என்றிருந்தவர்கள் தமது தலைநகரிலேயே இன்று என்ன நடக்குமோ என்று சதா பயந்து வாழவேண்டியவர்களாய் உள்ளனர்.

இது அரசின் அணுகுமுறையில் தவறு இருப்பதையே எடுத்துக்காட்டுகின்றது. இந்த நிலைமையில் புதியதொரு திருப்பத்தை உருவாக்குவது அரசுக்கு ஏற்பட்டுள்ள ஒரு தேவையாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும்படி வற்புறுத்திவரும் நிலையில் இந்த மகாநாட்டினால் எதுவித பயனும் ஏற்படப்போவதில்லையென அவர்கள் கருதுவதில் ஆச்சரியமில்லை. மகாநாட்டில்கலந்துகொண்டாலும் இதனையே அவர்கள் வற்புறுத்தவும்கூடும்.

தமிழர்கட்சிகளில் தமிழர் விடுதலைக்கூட்டணி கலந்துகொள்வதில்லையென ஏற்கனவே அறிவித்துவிட்டது. அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கொழும்புக் கிளை கலந்து கொள்ளுமா என்பது இன்று தெரியவரும்.

இதற்கிடையில் சிறிலங்கா மக்கள் கட்சியின் செயலாளர் திரு. குமாரணதுங்க தமிழ்நாடு சென்று தமிழ் இயக்கங்களின் தலைவர்களை சந்தித்திருப்பது ஒரு குறிப்பிடத்தக்க அம்சம். தமிழ்நாடு புறப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவை அவர் சந்தித்துள்ளார். உண்மையில் சிறிலங்கா மக்கள் கட்சி விடுத்த ஒரு யோசனையின் பேரிலேயே இப்போதைய அரசியல்கட்சி மகாநாடு நடைபெறவிருக்கின்றது.

தமிழ்நாட்டில் தமிழ் இயக்கத் தலைவர்களைச் சந்தித்ததின்பின்னர் அவர் வெளியிட்டுள்ள கருத்தில் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து ராணுவத்தை அப்புறப்படுத்துவதின் மூலமே இன அமைதிக்கான ஒரு தீர்வைக் காணமுடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

போராளிகளின் தலைவர்களைச் சந்தித்ததின் பின்பே திரு குமாரணதுங்க இவ்வாறான ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார் என்பதைக்கவனிக்க வேண்டும். கள்ளக்கடத்தலைக் கட்டுப்படுத்துவதற்கென்றேமுதன் முதலில் வட பகுதிக்கு ராணுவம் அனுப்பப்பட்டது. இன்று என்ன நடக்கின்றது? இலங்கை அரசுக்கே உண்மைகள் வெளிப்படுமோ என்பது சந்தேகம்.

அப்பட்டமான பொய்களை அவிழ்த்து விடும் 'லங்கா புவத்' செய்திகளை தென்பகுதி மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள். நிலைமைகளை நேரில் பார்க்கும் வாய்ப்பு தென்னிலங்கைத் தலைவர்களுக்கோ, மக்கள் சாதனப் பிரதிநிதிகளுக்கோ ஏன் உயர்மட்ட அரச அதிகாரிகளுக்கும் கூட இல்லை.

இந்நிலைமையில் தென்னிலங்கை அரசியல் தலைவர்களில் ஒருவரான திரு. குமாரணதுங்க தென் இந்தியாவுக்குச் சென்று போராளிகளின் கருத்தை நேரடியாக அறிய முடிந்தது வரவேற்கத்தக்கது.

தென்னிலங்கையிலும், அரசியல் கட்சிகள் மத்தியிலும் தமிழ்ப்போராளிகளின் நிலைப்பாடு பற்றி எழுந்துள்ள தவறான கருத்துக்கள் களையப்படுவதற்கு இது உதவலாம். அரசியல் கட்சி மகாநாட்டிலும் அவர் தாம் அறிந்தவற்றை வெளியிடக்கூடும்.

எதுவானாலும் வடக்குக் கிழக்கில் நிலைகொண்டுள்ள ஆயுதப்படைகளை அப்புறப்படுத்துவது அல்லது எண்ணிக்கையைக் குறைத்து முகாம்களுக்குள் கட்டுப்படுத்துவது இப்பகுதி மக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு உதவுவதாய் இருக்கும். அமைதி முயற்சிக்கு இது முதற்படியாகவும் அமையலாம்.

---

'மக்களுக்குக் கோபம் வந்தால் மன்னர்க்குச் சொல்வோம்-வந்த மன்னவர்க்கே கோபம் வந்தால் யாரிடம் சொல்வோம்.....?'

# கரையோர மக்கள் கூறும் கண்ணீர்க் கதைகள்!

தாளையடிக் கடற்கரையை விட்டுப் பிரியவேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது. அப்போது காவியச்சுவை ஒன்றும் என் மனதில் உதயமானது.

துஷ்யந்தனின் காதலி கடற்கரைக்குச்சென்று தாமரை இலையைப்பிடுங்கி பித்திகையின் மலராகிய மொட்டெடுத்து தன் எண்ணக்கலந்தயினை இலையிலே பொறித்து அனுப்பிய காதல் கதையே துஷ்யந்தன் சரித்திரம்! பிரிந்து செல்லும்போது பாட்டியின் வீட்டுப்பழையநினைவுகள் போன்று என் நெஞ்சில் இருந்து இந்த நினைவும் இழையோடியது.

தாளையடியை விட்டுச்செல்லும்போது சிமியோனும் செம்பியன்பற்றுவரை கூடவே வந்தார்.

பிரான்சக்குத் தடிமன் பிடித்தால் ஐரோப்பாவுக்குச் சளிச்சுரம் பிடிக்கும் என்று ஒரு வரலாறு உண்டு. அதுபோல ஆனையிறவில் இராணுவம் மீது தாக்குதல் நடந்தால் செம்பியன்பற்றில் ஹெலிகொப்டர், மீனவர் மீது துரத்தித் துரத்திச்சுடும், இது தொடரும் வரலாறு. இவ்வாறு பாதிக்கப்பட்ட இடங்கள் சிலவற்றைச் சுட்டிக்காட்டிய பின்பு வணக்கம் கூறி விடைபெற்றுச்சென்றார் சிமியான்.

செம்பியன் என்பது அழகை உணர்த்தும் ஒரு அடைமொழிச் சொல்.

சோழ அரசியைச் செம்பியன் மாதேவி என அழைக்கும் வழக்கமும் இருந்தது.

அழகான இவ்விடங்களின் இயற்கைஅழகில் தன்னைப் பறிகொடுத்தசுப்பராவ் என்றஅறிஞர் இக்கரையோரங்களைப் ''பண்பாட்டுமையம்'' என்று சிறப்பித்து எழுதினர்.

அந்தப் பண்பாட்டு மையங்கள் அரசின் கொடூர சட்டங்களால் அழியும் நிலையில் இருக்கின்றன.

நான் எடுத்த தரவுகளின் அடிப்படையில் கடலோரச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கைகள்:

| இடம்: | பதிக்கப்பட்ட குடுப்பங்கள் |
|---|---|
| 1. கற்கோவளம் | 300 |
| 2. குடத்தனை | 60 |
| 3. அம்பன் | 25 |
| 4. நாகர்கோவில் | 350 |
| 5. செம்பியன்பற்று | 150 |
| 6. மருதன்கேணி | 200 |
| 7. ஆழியவளை | 150 |
| 8. தாளையடி | 750 |
| 9. பருத்தித்துறை முனை | 300 |
| மொத்தம் | 1200 |

ஜே. பி. கொன்ஸ்ரயின் என்ற ஓவியர் வரைந்த மழை பெய்யும் படங்களைப் பார்க்க வருவோர் தாம் பார்ப்பது ஓவியம் என்று உணராமல் குடையைத் தேடுவார்களாம்! அதுபோன்று கரையோர மக்களின் துன்பங்களை உணர்வோர் தம்மையறியாது கைலேஞ்சியைத் தேடவேண்டிய கட்டம் இச்சட்டத்தால் வந்தேதீரும்!

பாலுக்குப்பாலகன் வேண்டி அழும் நேரம் ''செவிக்குணவில்லாதபோது வயிற்றுக்கு ஈயப்படும்...'' என வேதாந்தம் பேசமுடியுமா?

அந்த நிலையில் வாடும் குடும்பங்கள் எத்தனையோ! கற்கோவளத்தில் பருத்தித்துறை

**கள ஆய்வு**

முனையிலிருந்து பலர் இடம் பெயர்ந்து இருக்கிறார்கள். அகதிகள் கூடாரமாகக் கற்கோவளம் காட்சியளிக்கின்றது

### காடுகள் வெட்டப்படும் கரையூர்

நகார்கோயிலுக்கு அருகிலே கரையூர் என ஓரிடம் இருக்கின்றது. அங்கு பலாலி மயிலிட்டி ஆகிய இடங்களில் இருந்து சொத்து சுகங்களையெல்லாம் விட்டுவிட்டுப் பற்றைக்காடுகளை வெட்டியாவது கொட்டில்போடும் நிலையிலே மக்கள் குவிந்துகொண்டிருக்கிறார்கள்.

காடுகள் வெட்டும் சத்தம் ஒரு சமுதாயத்தின் வீழ்ச்சி என எழுதினான் அன்டன் செக்கோவ்.

ஆம்...! தமிழினத்துக்கும் இது ஒரு வீழ்ச்சிக்காலம் தான் சந்தேகமே இல்லை.

நாலுபக்கமும் கடல் சூழ்ந்த நாடு டின் மீன்களை ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்து கொண்டிருக்கின்றது.

இந்த நாட்டின் மீன் தேவையில் 25% கடலட்டையில்48% சங்கு 45% பெற்றுத் தரும் தொழிலாளிகளின் கைகளைக் கட்டி பிச்சை முத்திரைகள் தருவதில் அரசு முனைந்திருக்கிறது 18 மைல்கள் கடற்கரையைப் பாதுகாக்க 60 பீரங்கிப் படகு கொண்ட பாதுகாப்பு ரோந்துப் படை. இது எமது கூற்றுக்கள் அல்ல கற்கோவளம் மீன் சந்தையில் பேட்டி கண்ட அலோசியஸ் என்ற வாலிபர் எமக்கு ஆக்ரோஷமாகத் தந்த கருத்துக்களே இவை.

### பருத்தித்துறை முனையை நோக்கி

பருத்தித்துறையிலே 'முனை' என்ற இடம் முக்கியம் பெற்ற ஓர் இடம். மீன் பிடியிலும் கப்பல் ஓடுவதிலும் புதிய வரலாறு படைத்தவர்கள் அவர்கள். பருத்தித்துறை 3ம் குறுக்குத் தெருவில் இருந்து முனையை நோக்கி எனது கால்கள் நடக்க ஆரம்பித்தன

இந்தப் பாதையில் அடிக்கடி 'ஷெல்' விழுவது, அழுகை ஒலங்கள் கேட்பது சர்வசாதாரணமாகிவிட்டது. ஒரு சிகரெட் புகைத்தால் 15 செக்கன் வாழ்க்கை முடிந்து விடுகின்றது; 'ஷெல்' விழுந்தால் அந்தக் கணமே கதை முடிகின்றது இப்படியே நினைத்துக் கொண்டு முனைக்கு அருகே சென்று ஒரு மீனவரைப் பேட்டி கண்டேன் அவர் தனது பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை ஆகையால் அவருடன் கதைத்த விடயங்களை எனது கருத்தில் சம்பாசிக்க விரும்புகின்றேன்.

### மலேயின் ஓவியம்

''மலே என்ற ஓவியன் சமய சம்பந்தமான ஓவியங்கள் வரைவதிலேயே மிகவும் வல்லவன். இந்து பதத்தின் இடம் மாலி எவ்வளவு செல்வாக்குப் பெற்று இருக்கிறதோ அந்த நிலையே கிறீஸ்தவ மக்கள் மத்தியில் ''மாலே''க்கு உண்டு. கணவனும் மனைவியும வயலிலே வேலைசெய்ய வயலுக்குப் போகின்றார்கள்.

வேலை செய்து கொண்டிருக்கும் போது தேவாலயத்தில் மணியோசை கேட்கின்றது. வயலில் வேலை செய்த அந்தத் தம்பதியினர் வேலைக்கு மத்தியில் தமது வேலையை மறந்து இறை பக்தியில் மூழ்கி இருக்கின்றனர். இதுவே ''மாலே'' சித்தரித்த அந்த மகத்தான ஓவியம். அங்கே மணியோசை கேட்ட போது இறை பக்தியில் மனிதர்கள் மூழ்கினர் இன்று— என்ன நடக்கின்றது......?

தாய் தந்தையரை விட்டுப் போராளியான ஒரு இளம் வாலிபன் பல ஆண்டுகளான பின் ஒருநாள் வீட்டுக்கு வந்தான் தாய், தந்தையர் அடைந்த களிப்புக்கு இடமில்லை மதியநேரம் போராளி தனது தாயின் சாப்பாட்டைப் பல ஆண்டுகளின் பின்பு சாப்பிட உட்கார்ந்தான் அப்போது வீடு எரிகின்றது.

திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

(6ம் பக்கம் பார்க்க)

---

## இன்று யாழ். வண்ணை ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் மகாகும்பாபிஷேகப் பூர்த்திவிழா

வந்தித்தே வருமடியார் வல்வினையை நீக்கிடுவாள்
சிந்தித்தே சிறப்பான சீர்வாழ்வு நல்கிடுவாள்
பந்தித்த பழவினைகள் பஞ்சாய்ப் பறந்திடுமே
சந்தித்தே சென்றிடுவீர் சர்வமங்கள மருள்வாள்.

— இராசையா ஸ்ரீதரன்

## கவியரசே உனது புகழ் வாழும்

தத்துவத்தைச் சாத்திரத்தைச் சமயந்தன்னை
தமிழினிலே குழைத்துநல்ல கவிதையாக்கி
வித்துவத்தை அதில் கலந்து பருகத்தந்தாய்
விண்ணவரும் அதுகண்டு வியந்துபோனர்

அர்த்தமுள்ள இந்துமதம் ஆக்கித்தந்து
அவையினிலே பெரும்புலவன் ஆகக்கண்டு
கர்த்தருக்குக் காவியமே பாடிவைத்த
கவியரசே உனதுபுகழ் வாழும்நாளும்.

— வ. யோகானந்தசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாப் நிலைமையைச் சீர்செய்ய பர்னுலாவுக்கு ராஜீவ் அறிவுறுத்து!

புதுடில்லி ஜூன் 24

பஞ்சாப்பில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீர் குலைவதைத் தடுத்து மீண்டும் மாநில மக்களிடையே நம்பிக்கை யூட்டுமாறு பஞ்சாப் முதலமைச்சரை பிரதமர் ராஜீவ் காந்தி கேட்டுள்ளார்.

வன்முறை அதிகரிப்பால் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுவதை திரு. பர்னுலாவின் கவனத்திற்கு கொண்டு வந்த பிரதமர் மக்கள் மனதில் மீண்டும் நம்பிக்கை ஊட்டத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் மாநில அரசு மேற்கொள்ள வேண்டியதின் அவசியத்தையும், முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினர்

கடந்த ஞாயிறு பஞ்சாப் சென்று வந்த உள் துறை அமைச்சர் திரு. பூட்டாசிங் உள் துறை ராஜாங்க அமைச்சர் திரு. குலாம் நபி ஆசாத் ஆகியோரைச் சந்தித்து பஞ்சாப் நிலைமை பற்றி கேட்டறிந்த பிரதமர் முதலமைச்சர் பர்னுலாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோதே இதனைத் தெரிவித்தார்.

தமது மாநில அரசு தீவிரத்தை முழுமையாக அறிந்துள்ளதென்றும் இதுதொடர்பான சகல நடவடிக்கைகளும் உடனடியாக மேற் கொள்ளப்படுமென்றும் திரு பர்னுலா உறுதி கூறியிருப்பதாக புதுடில்லியில் செய்தியாளர்களிடம் அரசு அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

பிரதமருடனான ஆலோசனையின் பின் திரு பர்னுலா உள் துறை அமைச்சர் திரு பூட்டாசிங்கைச் சந்தித்துப் பேசினர்

இப் பிரச்னை பற்றி மத்திய மாநில அரசுகள மேலும் விவாதிக்குமென தெரிய வருகிறது. பஞ்சாப் சட்ட ஒழுங்கு நிலைமை பற்றி உள் துறை அமைச்சின் உயரதிகாரிகள் மாநாடு ஒன்றும் நடைபெற்றது. இதில் உள் துறை செயலாளருடன் பஞ்சாப் காவல் துறை அதிகாரியும் எல்லைப் படை காவல் துறை அதிகாரியும் கலந்து கொண்டனர். காவல் துறை அதிகாரிகளை இம் மாநிலத்துக்கு அனுப்பி சட்ட ஒழுங்கு நிலைமைகளை அமுல் படுத்தத் தேவையான சகல வசதிகளும் செய்து தரப்படுமென்று இம் மாநாட்டில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் அமரிஸ்தரில் தொடர்ந்து வன்முறை நடப்பதை அடுத்து முதலமைச்சர் திரு. பர்னுலா அங்கு சென்றுள்ளார். (சிவ)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம். செவ்.

உடுவில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேஸ்வர சுவாமி ஆலய மகா சங்காபிஷேகம் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளது.

## அஞ்சலி சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், புதன்

தாஸ், கிசாங். காளி, பீற்றர், மோகன் ஆகிய ஐவரதும் நூறாவது நாள் நினைவாக நினைவஞ்சலிப் பிரசுரங்கள் யாழ்ப்பாண குடாநாடெங்கும் ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த மார்ச் மாதம் 11ம் திகதி மேற்படி ஐவரும் யாழ் ஆஸ்பத்திரி வளவினுள் சுட்டுக்கொல்லப்பட்டதனைக் குறித்தே இப் பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன என மேற்படி பிரசுரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இராணுவ சீருடையுடன் மேற்படி ஐவரினதும் புகைப் படங்களும் பிரசுரத்தில் காணப்படுகின்றன. (ஐ)

## நயினையில் உற்சவ காலங்களில் விசேஷ ஆராதனைகள்

வேலணை, செவ்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் தற்போதுள்ள சூழ்நிலைகளாலும், யாத்திரிகர்களின் போக்குவரத்து கஷ்டங்களினாலும் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வருட உற்சவத்தினங்களில் விஷேட அபிஷேக ஆராதனைகளும், பூசைகளும் உரியமுறைப்படி நடத்தப்பட்டன. ஆனால் சுவாமி வீதிவலம் வருதல் மட்டும் நடைபெறவில்லை. கடந்த செவ். 20ம் திகதி இவ்வாலயத்தின் ரதோற்சவ தினமாகையால் அன்றைய தினம் மட்டும் சுவாமி வெளிவீதிவலம் வருதல் இடம்பெற்றது.

அன்றையதினம் 'அமுத சுரபி' அன்னதான சபையினர் அன்னதானம் வழங்கினர்கள் சென்றவருடங்கள் போல் இவ் வருடம் நயினாதீவு ஆலயவீதிகள் யாவும் வெறிச் சோடிக் கிடக்கக்காணப்பட்டன

## லொறி கடத்தல்

வவனியா, செவ்வாய்

வவனியா பஜார் வீதியில் முஸ்லிம் ஒருவருக்கு சொந்தமான லொறி ஒன்று கடத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்றுக் காலை பத்து மணியளவில் இச் சம்பவம் நடந்தது.

## கடற்தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு

கரவெட்டி, செவ்.

கிராம மட்டத்தில் கடல் தொழில் அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அரசாங்கம் திட்டம் தயாரித்துள்ளது. இதனால் 1985ம் ஆண்டில் அமைக்கப்பட்ட கடல்தொழில் விரிவாக்க சேவைச் சங்கங்கள் காலாவதியாகியுள்ளன. இதற்குப் பதிலாக கிராமமட்டத்தில் கடல் தொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு ஏற்படுத்தப்பட்ட இருக்கின்றது. இந்த அமைப்பு மூலமாகவே கடல்தொழில் கடன்கள், மானியங்கள் வழங்கப்படும் எனத் தெரியவருகின்றது.

மேதிக விபரங்களுக்கு மீனவர்கள் கடற்தொழில் விரிவாக்க அலுவலருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர் (த)

## அனுமதிபெற்றோர் விபரம் விரைவில்

கொழும்பு செவ்வாய்

கடந்த ஆண்டு ஆகஸ்டில் நடைபெற்ற க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழங்களில் அனுமதிபெற்றவர்களின் பெயர்ப்பட்டியல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில நடைபெறும் உயர்தரப் பரீட்சைக்கு முன் இப்பட்டியல் வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. [சிவ]

## நிவாரணநிதி உதவி

யாழ்ப்பாணம், புதன்

மண்டைதீவுக் கடலில் கொலையுண்ட குருநகர்மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணநிதி உதவி வழங்க வட இலங்கை கைத்தொழில் சபை ஏகமனதாக முடிவுசெய்துள்ளது.

ஹோட்டல் ஞானம்ஸில் அண்மையில் இடம் பெற்ற இச்சபையின் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது. கொலையுண்ட மீனவர்களின் குடும்பங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றும் இச்சபையினரால் நிறைவேற்றப்பட்டது

ஜுலைமாதம்முதல்வாரத்தில் இறந்த மீனவர்களின்குடும்பங்களுக்கான நிவாரண உதவியை வழங்குவதென்று இச் சபைமுடிவு செய்துள்ளது.

## உலகச் செய்திகள்

## தட்சர் கொலை முயற்சியில் எதிரிக்கு35ஆண்டு யுள்சிறை

லண்டன் ஜுன் 24

பிரிட்டனில் 2 ஆண்டுகளுக்கு முன் கன்சவேட்டிவ் கட்சி மாநாடு நடந்த ஹோட்டல் ஒன்றை குண்டு வைத்துத் தகர்த்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு 35 ஆண்டுகள் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

1984 [illegible] நத இம் மாநாட்டில் [illegible] [illegible] திருமதி தாட்சர் இவ்விடத்தில் உயிர் தப்பியதும் வேறு 5 பேர் கொல்லப்பட்டதும் [illegible].

## இந்திய கிரிக்கெட் குழுவுக்கு எம்.ஜி.ஆர். வாழ்த்துத் தந்தி

சென்னை ஜுன் 24

இந்தியா இங்கிலாந்துக்கிடையில் லீட்ஸில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்போட்டியில் வெற்றிபெற்ற இந்தியக் கிரிக்கெட் குழுத் தலைவருக்கும் ஏனைய வீரர்களுக்கும் பாராட்டுத் தந்தி ஒன்றை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் கபில்தேவுக்கனுப்பி வைத்துள்ளார்.

இந்தியக் கோஷ்டியின் இவ் வெற்றி குறித்து பிரதமரும் இந்திய ஜனாதிபதியும் தமது வாழ்த்துச் செய்திகளையும் அனுப்பி வைத்துள்ளனர்.

## வவனியாவில் 6 யாழ் இளைஞர் கைதாகிவிடுதலை

வவனியா, செவ்வாய்

நேற்றுக்காலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த தனியார் பஸ் வண்டி ஒன்று வவனியாச்சோதனைமுகாமில்இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டபோது அதில்பயணம் செய்த ஆறு யாழ்ப்பாண இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டார்கள்

கைது செய்யப்பட்ட ஆறு இளைஞர்களையும் இராணுவத்தினர் வவனியா பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். விசாரணையின்பின் நேற்று மாலையே இந்த ஆறு இளைஞர்களையும் பொலிஸார் விடுதலைசெய்தனர்.

## தமிழ்நாடு முதல்வர் எம். ஜி. ஆர். விஜய குமாரணதுங்க சந்திப்பு

சென்னை ஜுன் 24.

இலங்கை மக்கள் கட்சித் செயலர் திரு. விஜய குமாரணதுங்க தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ராமச்சந்திரனை நேற்றிரவு அவரில்லத்தில் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் கலந்துரையாடினர்.

நடைபெறவிருக்கும் அனைத்துக்கட்சி மாநாட்டில் இலங்கையில் அமுலில் உள்ள பயங்கரவாத சட்டத்தையும், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர்கள் பாராளுமன்ற பதவியை இழக்கச் செய்த அரசியல் சட்டத்தை ரத்துச் செய்யும் படியும் வற்புறுத்தப் போவதாக திரு. குமாரணதுங்க அங்கு தெரிவித்தார்.

இச் சந்திப்பில் முதலமைச்சருடன் மின் துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரனும் உணவுத்துறை அமைச்சர் திரு. எஸ். திருநாவுக்கரசும், இலங்கை மக்கள் கட்சி துணைத் தலைவர்கள் திரு அபய குணசேகரவும் திருமதி குமாரணதுங்கவும் கலந்து கொண்டனர் சந்திப்பின்போதுஇலங்கையில் ஜனாதிபதி கூட்டவிருக்கும் அனைத்துக்கட்சி மாநாடு பற்றியும் இலங்கையின் தற்போதைய நிலை பற்றியும் ஆராயப்பட்டதாக தெரிய வருகிறது

இதற்கிடையில் திரு. குமாரணதுங்க கடந்த 3 நாட்களாக பல்வேறு போராளிகள் குழுக்களையும் தமிழர் விடுதலைக கூட்டணித் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியுள்ளார். (சிவ)


வகுப்புகள் ஆரம்பம்!

TEI KNOWLEDGE IS WEALTH

Technical Engineering Institute

- Basic எலக்ரானிக்ஸ் அன்ட் றேடியோ, T. V. ரிப்பியாரிங்
- ஆட்டோமோபைல் ரிப்பியாரிங்,
- டீசல் மெக்கானிசம் அன்ட் ரிப்பியாரிங்,
- எயார்கென்டிசனர் அன்ட் ரேப்பிரிஜிரேட்டர் ரிப்பியாரிங்,
- Draftsmanship,
- எலக்ரிக் வயரிங்.

வகுப்புகள் ஆரம்பம்: 1 - 7 - 86

கற்பித்தல், பரீட்சை, சான்றிதழ், வகுப்புகளில் சேர உடன் பதிவு கொள்ளவும்.

C/o PILOT INSTITUTE,

151, செம்மணி றேட், நல்லூர்,

(கல்விக்கந்தோருக்கு அண்மையில்) (A-739)



பிரயாண ஒழுங்குகள்

கனடா ஜெர்மனி பிரான்ஸ் டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொன்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

பிரான்ஸ், ஜெர்மனி, கனடா செல்வதற்கு முற்பணம் செலுத்தியவர்கள் தொடர்புகொள்ளவும்.

INTERSUN GROUP,

சின்னத்தம்பி அவெனியு,

(மகளிர் கல்லூரி அருகாமை),

மானிப்பாய். [A 729]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

**வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்**

அரசாங்க ஒப்பந்தகாரர் நலன் கருதியும், உங்களுக்கு ஏற்படும் பிரச்னைகளை நிவர்த்தி செய்யும் நோக்குடன் மேற்படி சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது. சகல ஒப்பந்தகாரர்களும் இச்சங்கத்தில் அங்கத்தவராகச் சேரும்படி வேண்டுகின்றோம்.

செயலாளர்,
வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கம்,
32, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(C3057)

## ஓர் முக்கிய அறிவித்தல்

தோலகட்டி தயாரிப்புக்கள் நகரில் தாராளமாக கிடைக்கின்றது.
தட்டுப்பாடோ அல்லது கட்டுப்பாடோ கிடையாது.
எது எப்படியானாலும் எமது தயாரிப்புக்கள் தொடர்ந்து கிடைக்கும்.
போலிகள்! கவனம்
எமது நெல்லி ரச லேபலில்
ஒரு மணிக்கூட்டு கோபுரம் உண்டு
அதில் நேரம் 6–20 மணியைக் காட்டுகின்றது.
ஆகவே உன்னிப்பாக கவனித்து வாங்கவும்.
இவ் இளவேனிற் காலத்தில்

**தோலகட்டி நெல்லிரசம்**

உங்கள் தாகத்தை நிச்சயம் பூர்த்தி செய்யும்.

**செபமாலை தாசர் சபை,**
தோலகட்டி, வயாவிளான்.

ஏகப் பிரதிநிதிகள்:

**ஹோ. எகட்டன்,**
செனித் மார்கட்டிங், யாழ்நகர்.

யாழ்நகரில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள:

**வரணி மிசன் விற்பனை நிலையம்,**
145, நவீன சந்தை, யாழ்நகர்.

(A 753)

## St. John's College, Jaffna

## COURSE IN Automobile Engineering

Applications are invited for a two-year job-oriented course in Motor Vehicle Engineering progressively leading to:

1. City and Guilds (C. G. L. I.) Motor Vehicle Technician's Certificate Examinations.
2. Exemption from relevant Specialist subjects of Institute of Motor Industry (I. M. I.), U. K.
3. Membership in I. M. I. at suitable level.
4. Registration in London through I. M. I. as Technician Engineer.
5. Preferential Employability in Motor Industrial Field.

MINIMUM QUALIFICATIONS:
Credits in English, Mathematics and suitable Science subject at G. C. E. Ordinary Level.

MODE OF SELECTION:
Written test in English and Interview.

MEDIUM OF INSTRUCTION:
English.

FEES: Rupees 1200/- per year or Rupees 450/- per term.

SECURITY DEPOSIT:
RS. 450/- refundable on satisfactory completion of full course.

CLOSING DATE:
15th July 1986.

Interested students with suitable educational background should apply before closing date on prescribed form available at College office on payment of examination fee Rs. 20/-

PRINCIPAL.
CHUNDIKULI,
JAFFNA, 24th June 1986.

## தஞ்சம்

சாவகச்சேரி செவ்

கிளிநொச்சி நகர்ப்புறத்தில் தங்கியிருந்து தொழில்பார்த்து வந்த சுமார் ஏழு குடும்பங்கள் அங்கு நிலவுகின்ற பதற்றம் காரணமாக காட்டுப்பாதை வழியாக சாவகச்சேரியை வந்தடைந்துள்ளன. (க)

## சிறுமியின் மரண விசாரணை

யாழ்ப்பாணம் புதன்

யாழ். கச்சேரியடியிலுள்ள வீடொன்றில் மர்மமான முறையில் மரணமான அராலியைச் சேர்ந்த 13 வயதுச் சிறுமி இராணியின் மரண விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார். பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க)

## 31 ம் நாள் நினைவஞ்சலி



திருமதி செல்லம் இராஜநாயகம்
உடுப்பிட்டி

தோற்றம்:
20-12-1910
மறைவு:
26-5-1986

அன்பிற்கு முண்டோ
அடைக்கும் தாள்,
அன்பின் திருவுருவாய்
அறிவின் பிறப்பிடமாய்
அல்லும் பகலும்
அயராது பாடுபட்டு
ஒல்லும் வகையால்
பிள்ளைகட்கு உயர் வாழ்
வளிக்க
அனுதினமும்ஆண்டவனை
அன்புடனே வேண்டி
நின்று
எம்மையெல்லாம்
ஆளாக்கிப் பேராக்கி
அவை முன் நிற்கவைத்த
அன்பின் ஒளியே
இல்ல விளக்கே நாம்
கண்கண்ட தெய்வமே
கருணை வெள்ளமே
உம் போன்ற அன்னையை
நாம்உலகில்கண்டதில்லை.
உம்பிரிவு எம்மால்
தாங்க முடியாதம்மா.
மண்ணில் மறைந்து
விண்ணில் சென்று
விட்டாய்.
எம் மனதில் ஏற்றிய தீப
ஒளி மங்காதம்மா.
உங்கள் அறிவொளியும்
அகலாதம்மா
ஆண்டவன் அடிதனில்
சேர்ந்து நின் அன்பின்
கரம் கூப்பி வேண்டி
நிற்பாய் எங்கட்காய்
அன்னையே. நாம் கரம்
கூப்பி சிரம் தாழ்த்தி
என்றென்றுமே உங்கள்
ஆன்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சு
கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
மற்றும்
சுற்றத்தார்.

''ஜெப இல்லம்''
உடுப்பிட்டி. (C 3067)

## அரையாண்டு நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



திரு. சின்னத்தம்பி செல்வநாயகம்
(தில்லைநாதன்)
(லக்ஸ்மி சைக்கிள் வேக்ஸ் உரிமையாளர்)
மீசாலை வடக்கு
கொடிகாமம்.

தோற்றம்: 31-10-1939

மறைவு: 29-01-1986

எங்கள் இல்லத்தில் அணையாத தீபமாக ஒளி வீசிய அன்புத் தெய்வமே உங்களை இழந்துதவிக்கும் நாம் இன்று கண்ணீரால் துயரை அர்ச்சித்து ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் புதன்கிழமை காலை (இன்று) அன்னாரது இல்லத்தில் இடம் பெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆறாத் துயருறும்,

அன்பு மனைவி,
அன்புச் செல்வங்கள்,
உற்றார், உறவினர்.

தட்டாங்குள றோட்,
மீசாலை வடக்கு,
கொடிகாமம். C 3046

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



கனகரட்ணம் சுதர்சன் (ஜெயா)

மண்ணிலே பிறந்தது:
25-01-1967

விண்ணிலே கலந்தது:
25-06-1985

அருமை நண்பனே
ஆருயிர் தோழனே
புன்முறுவல்கள் காட்டி
உத்தமனாய் வாழ்ந்து
நற்பெயர்கள் பெற்றாய்
உனை மறக்க
உள்ளங்களும் உண்டோ
எம் அருமை தோழா.

பிரிவால் வாடும்,
நண்பர்களும்,
குடும்பத்தினரும்.

யாழ்ப்பாணம்.

C 3075

## சென். பற்றிக்ஸ்வெற்றி

யாழ்ப்பாணம் புதன்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக்கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற, 17- வயதுக் கிரிக்கெட்போட்டியில், சென். பற்றிக்ஸ் இன்னிங்ஸ் வித்தியாசத்தால் வெற்றி பெற்றது.

சென். பற்றிக்ஸ் முதல் இன்னிங்ஸில் 7 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 150 ஓட்டங்களைப் பெற்றது. ஏ. எம். நிர்மலராசா 38 ஓட்டங்களையும், ஆர். பி. சௌந்தரநாயகம் 30 ஓட்டங்களையும் எடுத்தனர். றெபின்ஸனும், ரவிக்குமாரும் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்கள்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி முதல் இன்னிங்ஸில் 68 ஓட்டங்களையும், 2- வது இன்னிங்ஸில் 31 ஓட்டங்களையும் பெற்றது. ஸி. ஆர் ஜெயவேந்திரா முதல் இன்னிங்ஸிலும், 2- வது இன்னிங்ஸிலும் மொத்தம் 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சௌந்தரநாயகம் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகளையும், நிர்மலராசா 2- வது இன்னிங்ஸில் 7 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு சிட்டுவும், டேவிற்றும் மத்தியஸ்தம் வகித்தார்கள். (வி)

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

Applications will be received by me from suitable candidates for the following posts:

1. PROFESSOR IN STATISTICS.
2. Senior Lecturer/Lecturer/Assistant Lecturer in Chemistry / Physics/Botany.
3. Assistant Lecturer in Mathematics and Statistics/Zoology.

Closing date for the post of Professor will be 5th September 1986 and others will be 31st July 1986.

Application forms and particulars for the above Posts may be obtained from this office.

Request for application forms for the post of Professor should be accompained by a self-addressed Rs. 1.50 stamped envelope of 23 x 10 c.m. in size and for the posts of Senior Lecturer, Lecturer and Assistant Lecturer should be accompanied by a self-addressed stamped envelope 23x10 c m. in size.

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Head of such Institutions.

REGISTRAR
University of Jaffna,
Sri Lanka,
Thirunelvely, Jaffna.
23rd June, 1986, A 869

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா - சுஜாத்தா-ஜெய்சங்கர் நடித்த
**விதி**
(கலர் - புதிய பிரதி)

**லிடோ**
காலை 1 0-30, 2-30, 6-30
கமல்-ரஜனி-ஸ்ரீதேவி-ஜெய்கணேஷ்-நாகேஷ் நடித்த
**தாயில்லாமல் நானில்லை**
(கலர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
புதன்கிழமை 25 6-86

## அந்தர்யோகம்

யாழ்ப்பாணம் செவ்வாய்
திருநெல்வேலி 'ராமகிருஷ்ணலயத்தில்' மீண்டும் அந்தர்யோகம் எதிர்வரும் 28-ந் திகதி சனிக்கிழமை சுவாமி சித்ரூபானந்தா அவர்களால் ஆரம்பித்து நடாத்தப்படவுள்ளது.

வாழ்க்கை முறைப்பயிற்சி பற்றிய இந்த நெறியில் தியானம், மௌனம், சற்சங்கம், நாமபஜனை, சந்தேகம் தெளிதல், கூட்டுவழிபாடு, பூஜை என்பன இடம் பெறும். இத்துடன் திருமதி நா. பிரம்மானந்தா அவர்களின் நற்சிந்தனைப் பாடல்களும் இடம் பெறும். (ஐ)

## கரையோர

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம் சுடும் சத்தம், எடுத்த கவளம் சோற்றை விட்டுவிட்டு போராளி பருத்தித்துறை மாக்கட் பக்கம் ஓடுகின்றான். இராணுவம் முகாமுக்கு ஓடுகின்றது. சிலர் விழுந்து கிடக்கின்றனர் ஆம்...! எமது போராளியும் இறந்து விட்டான்.

லியனோடாவின்சி படைத்த கிறிஸ்துவின் கடைசி இராப்போசனம் உலகின் கண்களில் அழியா இடம்பெற்றது. அது காலம் கடந்தது நண்பர்களே இந்தப் போராளியின் கடைசி பகற்போஜனம் எப்படி முடிந்தது? இந்திய சுதந்திர வரலாறு இத்தகைய வரலாறுகளைக் கண்டதுண்டோ? பலஸ்தீனில் கேட்டதுண்டா? போராளிக்கே இந்த நிலையென்றால் மீன் பிடிக்கவா மக்கள் போவார்கள் என அந்த வாலிபர் விளக்கம் அளித்தார். இதற்குமேல் அங்கு நான் நிற்க விருப்பவில்லை.

நம் மனோன் நிலை கண்டு கண்ணீர்த்துளிகள் 3 ம் குறுக்குத் தெருவில் விழுந்து தெறித்தது.

வாசகரே...! உம்மைத் தான்], உமக்கு எப்படியோ?

### கவிதைப் பொருள் உறங்குகிறது

'வரப்புயர' என ஔவை பாடிய போது அதைத் தொடர்ந்து என்ன என்ன நடக்கும் என்ற அர்த்தம் அங்கு தொனிவிடுகின்றது. நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைசெய்த சிறுவர்களின் நிலை கண்டு பிரிட்டிஸ் மாதரசி பிரௌனிங் என்ற பெண் கவிஞர் பாடிய 'அழுகுரல்கள்' என்ற கவிதையடிகளே சிறுவர் துன்பங்களை விடுதலை செய்தது.

கடல்வலயச்சட்டம் மீனவர்களின் கை, கால்களை முடமாக்கியுள்ளது.

தமிழர்களைச் சந்தேக நபர்களாகக் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தியுள்ளது.

வறுமைக்கடலோரம் நம்மவரை நிறுத்தியுள்ளது ஆனால் இந்தத்துன்பத்தைப் பாடவேண்டிய கவிக்குயில்கள் எங்கே? உங்கள் துயில்கலைக; எமது சகோதரர்கட்காகப் பாடுங்கள்... அதுவே இன்று கடல்பிரசங்கம் ஆகட்டும்!

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389.
4126

● தோலகட்டிச் சம்பவம்

# "மாட்டுத் தொழுவத்தில் மதகுரு இரத்தம் பெருக இறந்து கிடந்தார்"

## மரண விசாரணையில் சாட்சியம்

மாவிட்டபுரம்-செவ்வாய்
''சம்பவதினம் எமது ஆச்சிரம வளவில் அரசாங்க ஆயுதப்படையினர் நடமாடிய சமயம் சரமாரியாக துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன அவர்கள் சென்றதும் இறந்த மதகுருவைக் காணாது தேடினோம். அவர் மாட்டுத்தொழுவத்தில் துப்பாக்கிச் சூடுகளுடன் இரத்தம் பெருக வீழ்ந்து கிடந்தார்.''

இவ்வாறு வசாவிளான் தோலகட்டி கிறிஸ்தவ ஆச்சிரம குருவான வென் செல்லோஸ் [65 வயது] என்பவரின் மரணம் குறித்து நடந்த மரணவிசாரணையில் சாட்சியமளித்த மேற்படி ஆச்சிரம குருவானவர் வண. மேரி ஜோசெப் அடிகள் கூறினார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம்மரண விசாரணையை நடத்தினார்.

வண, மேரி ஜோசெப் அடிகள் மேலும் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''எமது ஆச்சிரம வளவில் அரசாங்க ஆயுதப்படையினர் நடமாடிய சமயம் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. நானும் சிலரும் பீதியால் ஒரு அறையில் ஒளித்துக்கொண்டோம். நாம் இருந்த அறை உடைக்கும் சத்தம் கேட்டது. உள்ளே வந்தவர்கள் எம்மை முழங்காலில் இருக்கவைத்து கையை உயர்த்தச்சொல்லி உத்தரவிட்டனர். நாம் அப்படியே செய்தோம். ஆங்கிலத்தில் எமது நிலையை விளக்கினோம். பின்னர் அவர்கள் போய்விட்டனர்.

அச்சமயம் இறந்த குருவானவரை காணாமையால் தேடினோம். அவரை 30 வருடகாலமாகத் தெரியும். எங்கள் ஆச்சிரமத்தில் மிகுந்த அடக்கமும், கீழ்ப்படிவுமுள்ள சகோதரராக அவர் இருந்தார். சம்பவதினம் பண்ணையில் வேலை செய்பவர்களை மேற்பார்வைசெய்து கொண்டிருந்தார். அவரைத் தேடிய சமயம் மாட்டுத்தொழுவத்தில் இறந்துகிடந்தார். துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் அவர் உடலில் காணப்பட்டன என்றார்.

வசாவிளானைச் சேர்ந்த செபமாலை ஞானப்பிரகாசம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: மேற்படி ஆச்சிரமத்தில் நான் 25 வருடங்களாக தொழில் புரிந்து வருகிறேன். சம்பவதினம் அவரது மேற்பார்வையில் பண்ணையில் வேலை செய்தேன். சரமாரியாக துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன. பயத்தினால் நான் ஜோசெப் அடிகளுடன் ஒரு அறையில் ஒளித்துக் கொண்டேன். அப்போது அறைக்கதவு உடைக்கப்பட்டது. பாதுகாப்பு படையினர் அங்கு நடமாடியதை யன்னலால் கண்டேன். அவர்கள் சென்ற பின் இறந்தவரை தேடியபோது அவர் பண்ணைப் பக்கம் சூட்டுக் காயத்துடன் இறந்து கிடந்தார்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளைபிரேதபரிசோதனை நடத்தி சாட்சியமளிக்கையில் இறந்தவரை மேரி ஜோசெல் அடிகளும், மைக்கல் சாமியும் அடையாளம் காட்டினர். உடலை நான் பரிசோதித்தேன் வலது முதுகின் கீழ்ப்புறமாகவும் நெஞ்சின்முன்புறமாகவும் துப்பாக்கி துளைக்காயங்கள் இருந்தன. இடது கையும் வலது கையும் முறிந்து காணப்பட்டிருந்தது. கல்லீரல், இருதயம் ஆகியவற்றில் ஏற்பட்ட பாதிப்பும் இரத்தப்பெருக்கும் மரணத்திற்கு காரணம் என்றார்.

முடிவில் துப்பாக்கி சூட்டால் இடம்பெற்ற கொலை என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

## மன்னார் கடலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யடுத்து கடலில் குதித்தவர்களில் இரு முஸ்லிம் இளைஞர்கள் நாச்சிக்குடாவில் பாதுகாப்பாக நீந்திக் கரைசேர்ந்துள்ளனர்.

இந்த இரு இளைஞர்களுமே தமக்கும் தமது சக பயணிகளுக்கும் மன்னார்க் கடலில் நேர்ந்த கதிபற்றி குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத் தலைவரிடம் நேற்று மேற்கண்ட தகவலை வெளியிட்டனர்.

இதேவேளை நேற்றுக்காலை சிறுத்தீவில் ஒருமுஸ்லிம் நபருவரின் சடலமும் குருநகர் தொடர்மாடிக்கட்டிடமருகே ஒரு ஆணின் சடலமும், கரை ஒதுங்கியிருந்தன. இவை போன்று மேலும் பல சடலங்கள் குடாநாட்டின் ஆள்அரவமற்ற கரையோரப்பகுதிகளில் கரையொதுங்கியிருக்கலாமென நம்பப்படுகிறது. [வி]

## திருமலையில் பதற்றம்

திருகோணமலை செவ்வாய்
திருகோணமலை சீனன்குடாவிலுள்ள பெற்றோலியசேமிப்பு நிலயத்தின் மீது செவ்வாய்க்கிழனம போராளிகள் மேற்கொண்ட தாக்குதலையடுத்து திருமலை நகரில் பெரும் பதற்றம் நிலவியது.

பாதுகாப்புப் படையினர் போராளிகளைத் தேடும் முயற்சியில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்ததைத் தொடர்ந்து அப்பகுதி மக்கள் பீதியின் காரணமாக பாதுகாப்பான இடங்களைத்தேடி இடம்பெயர்ந்தனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் நேற்று மாலை 7 மணிமுதல் இன்று அதிகாலை வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

## இன்று குருநகரில் மாண்ட மீனவர்க்கு அஞ்சலி செலுத்த மாபெரும் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்
அண்மையில் மிகப்பரிதாபமான முறையில் மண்டைதீவுக் கடலில் கொலையுண்ட மீனவர்களுக்கு அஞ்சலிசெலுத்தும் மாபெரும் கூட்டமொன்று இன்று பிற்பகல் நாலரை மணிக்கு குருநகர் கலையரங்க முன்றலில் நடைபெறவுள்ளது.

யாழ். தேவாலய பங்குத் தந்தை அருட் தந்தையான ஜெபநேசன்அடிகளின் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் சமய, பொதுஸ்தாபன மற்றும் அரசியல்துறைப் பிரமுகர்கள் அஞ்சலி உரை வழங்குவார்கள்.

குருநகரிலுள்ள அனைத்துப் பொதுமக்கள் அமைப்புக்களினால் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள இக் கூட்டத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி செய்ய விரும்புவோர் அவ்வாறு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## முஸ்லிம்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னெட்வீச்சும் இடம்பெற்றதாகத்தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்போது அகமது லெப்பை அக்பர் [25 வயது] யௌஸி[7வயது] ஆகியோர் இறந்துள்ளனர்.

எஸ்.எம்.சுல்தான்[வயது22] சுல்தான் யவ்வர் [வயது 28) சாகுல் ஹமீட் [வயது19]ரமீஸ் [வயது20] செய்துல் ஆப்தீன் [வயது17] மஃறூப் [வயது32] குவைஸ்(வயது19) ரம்ஜீ[வயது 20] கே. நஸீர் [வயது24] எம். அப்துல் காதர்[வயது38) ஆகிய பதினொருபேரே யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

கடந்தசில தினங்களாக ஏற்பட்டிருந்த பிரச்னையே இறுதியில் ஒரே சமூகத்தைச் சேர்ந்த இரு கோஷ்டியினருக்கிடையே மோதலாகியது எனத்தெரிய வருகிறது. (ஐ)

## இன்று

கிளிநொச்சி செவ்வாய்
சாவகச்சேரி வடக்கு அருள் மிகு பணமுவில் ஆரணிய குமரகோட்ட முருகமூர்த்தி கோவில் மகாகும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறுகிறது. இரவு திருச்கலியாண விழா நடைபெறவும் ஏற்பாடாகி உள்ளது.

## மட்டு-கொழும்பு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கம்பிகளால் அப்பயணிகளை தாக்கியதுடன் தாக்குதலுக்குள்ளான சுமார் 10 பேர் ரயில் பெட்டியிலிருந்து கடத்தப்பட்டுள்ளனர்.

பின்னர் மின்னேரியா ரயில் நிலையத்தில் அந்தரயில் நின்றபொழுது 25க்கு மேற்பட்ட தமிழர்களை ஆயுதப்படையினர் கைதுசெய்து முகாமுக்கு கொண்டுசென்றனர்.

பெருந்தெருக்கள், திணைக்களத்தைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவரும் இச்சம்பவத்தின்போது காணமல்போனதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## துர்நடத்தை: மின்கம்பத்தில் பெண்

மட்டக்களப்பு, புதன்
பொலிஸ் கொமாண்டோக்களுடன் துர்நடத்தையிலீடுபட்டது மட்டுமன்றி மேலும் பல பெண்களை ஈடுபடுத்த முயன்ற பெண்ணொருவருக்கு 'தமிழீழவிடுதலைப் புலிகள்' நேற்று மரண தண்டனை விதித்துள்ளது.

## 8 கட்சிகள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

நாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவையே இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ள பிரதான கட்சிகளாகும்.

## திருமலை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கைது செய்யப்பட்டவர்கள் 15 வயதுக்திம் 40வயதுக்குமுட்பட்டவர்களாவர்.

நேற்றுக்காலை தொடக்கம் மாலைவரை வீடுவீடாக சந்து பொந்துகள்தோறும் இச்சோதனை இடம்பெற்றது. இத்தேடுதல் நடவடிக்கையின் பாதுபல வீடுகளிலுள்ள பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் திருமலை கோட்டைக்கு முன்னுள் உள்ள முற்றவெளி மைதானத்தில் கடும்வெய்யிலில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமாலைவரை கைது செய்யப்பட்டவர்களுள் சுமார் 500 பேரே விடுவிக்கப்சட்டனராம்.

அரச, கூட்டுத்தாபன ஊழியர்களும் கைதுசெய்யப்பட்டவர்களுள் அடங்குவர். [மா]

## சர்வகட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் அவர் விளக்கமளித்தார்.

இதனிடையே, இலங்கையின் இனப்பிரச்னைக்கு அதிகார பரவலாக்கல் மூலம்தீர்வு காண இலங்கை அரசு இந்தியாவிடம் சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளில் முன்பு பல இடைவெளிகள் காணப்பட்டனவெனவும், ஆயினும்இந்த இடைவெளி இப்போது அகற்றப்பட்டு விட்டதெனவும் இந்திய வெளியுறவு அமைச்சின் அதிகாரி ஒருவர் நேற்றுப் புதுடில்லியில் கருத்துத் தெரிவித்தார்.

தற்போது இந்தஆலோசனைகளை தமிழ்குழுக்களிடம் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது எனத் தெரிவித்தார்.

இலங்கை அரசு தனது ஆலோசனைகளை இந்தியாவிடம் கையளித்தது முதல் புதுடில்லிக்கும், கொழும்புக்கும் இடையே இது விஷயத்தில் பரஸ்பர தொடர்பு இருந்து வந்ததென்றும் விளக்கினார். (வா)

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து நாகலிங்கம்

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் கண்ணபுரத்தில் வசிப்பவருமாகிய மாரிமுத்து நாகலிங்கம் காலமானார். அன்னார் காலம் சென்ற திருமதி யோகம்மா நாகலிங்கத்தின் அன்புக் கணவரும், முத்துலிங்கம், காந்தரூபி, பத்மாதேவி, காலம்சென்ற மகாலிங்கம், பரமலிங்கம் சாந்தலிங்கம், வசந்திமாலா ஆகியோரின் அன்புத் தந்தையும், கனகாம்பிகை, இராமச்சந்திரன், செல்வநாயகம், இரெத்தினம், ஜெயராணி, செல்வமலர் ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 25-6-86 புதன்கிழமை காலை 10 மணியளவில் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றாரும், உறவினரும், ஏற்றுக்கொள்ளவும்.

[C 3082]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org